# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24357580.*

**வழக்கு எண். 15322 / விசாரணை / 2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள் 24.09.09.</u>**

**முன்னிலை :** திரு.தி.சீனிவாசன். எம்.எஸ்சி.,
மாநில தகவல் ஆணையர்

**மனுதாரர் :** திரு. டி. என். சங்கரன்,
த/பெ. எம்.எஸ். நாராயணசாமி,
நெ.11, சந்திரா நகர் விஸ்தரிப்பு,
ஸ்ரீரங்கம் அஞ்சல்,
திருச்சிராப்பள்ளி– 620 006.

**பொது அதிகார அமைப்பு :** பொதுத் தகவல் அலுவலர்,
மத்திய நில அளவை ஆணையர் அலுவலகம்,
சேப்பாக்கம்,
சென்னை– 600 005.

--------

மனுதாரர் திரு. டி.என். சங்கரன் 22.09.09 தேதியிட்ட கடிதத்தில் தனது சார்பாக திரு. சி. தில்லைச்செல்வன் விசாரணைக்கு ஆஜராக அனுமதித்து அனுப்பியதன் அடிப்படையில் திரு. சி. தில்லைச்செல்வன் விசாரணைக்கு வந்திருந்தார். திருமதி. ப்பி. பிரேமா, உதவி இயக்குநர் ( வரைவு) / பொதுத் தகவல் அலுவலர், மத்திய நில அளவை அலுவலகம், சென்னை இவ்வாணையத்தில் இன்று (24.09.09) நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தார்.

மனுதாரர் 05.05.09 அன்று பொதுத் தகவல் அலுவலர், மத்திய நில அளவை அலுவலகம் அவர்களிடம் 3 இனங்களில் தகவல்கள் கேட்டு மனு செய்துள்ளார். 25.05.09

அன்று மனுதாரருக்கு குறிப்பிட்ட சில விவரங்கள் வழங்கினால் பரிசீலனை செய்யப்பட்டு தகவல் வழங்கப்படும் என்று பொதுத் தகவல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. 06.06.09 அன்று மேல்முறையீடு செய்துள்ளார். இவ்வாணையத்திற்கு 06.07.09 அன்று மேல்முறையீடு செய்த மனு இன்று (24.09.09) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையில் மனுதாரர் சார்பாக வந்திருந்தவர் 15.05.09 அன்று தகவல்கள் தரப்பட்டதாக தெரிவித்தார். இது குறித்து பொதுத் தகவல் அலுவலர் தெரிவிக்கையில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள கிராமம் நகர ஆரம்ப அளவையின் போது எடுத்துக்கொள்ளவில்லை என்றும், ஆகவே நகர நில அளவை பீல்டு பதிவேடு நகல் வழங்க இயலாது என்றும் தெரிவிக்கப்பட்டதாக தெரிவித்தார். மனுதாரருக்கு உரிய தகவல்கள் வழங்கப்பட்டதால் இவ்வழக்கு இத்துடன் முடிவு செய்யப்படுகிறது.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 30.09.09 — தமிழ்நாடு தகவல் ஆணையம்
ஆணையத்தின் ஆணைப்படி

( சு. மோகன தாஸ் )
உதவி பதிவாளர்

<u>வழக்கு எண். 15322/09</u>

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்,
மத்திய நில அளவை ஆணையர் அலுவலகம்,
சேப்பாக்கம்,
சென்னை– 600 005.

திரு. டி. என். சங்கரன்,
த/பெ. எம்.எஸ். நாராயணசாமி,
நெ.11, சந்திரா நகர் விஸ்தரிப்பு,
ஸ்ரீரங்கம் அஞ்சல்,
திருச்சிராப்பள்ளி– 620 006.